18 ஜூலை 2025 • வெள்ளி

TAMIL MURASU
VOICE OF THE COMMUNITY

# தமிழ் முரசு

சமூகத்தின் குரலாக, நூற்றாண்டை நோக்கி

MDDI (P) 001/04/2025

தோற்றம்: 1935 நிறுவனர்: தமிழவேள் கோ.சாரங்கபாணி

sph media

புகழ்பெற்றோர் பட்டியல்



தமிழ் முரசின் முன்னாள் ஆசிரியருக்கு அங்கீகாரம் 2

காங்கிரஸ்-திமுக



காமராஜர் பற்றிய கருத்தால் மோதல் 6

சேரன் இயக்கம்



மருத்துவர் ராமதாஸ் வாழ்க்கைத் திரைப்படம் 10

‘சைக்கிள் சக்கர’ பாணியில் செயல்படும் டான் டோக் செங் மருத்துவமனை

# கடும் காயமடைந்தோருக்கான சிகிச்சை நடைமுறை மேம்பாடு

கடுமையாகக் காயமடைந்தவர்களுக்கான அவசர சிகிச்சையை மேம்படுத்த மத்திய சிங்கப்பூரில் ‘சைக்கிள் சக்கரம்’ பாணியில் ஓர் ஏற்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.

இது, மோசமாகக் காயமடைந்த நோயாளிகள் மிகவும் பொருத்தமான மருத்துவமனையில் சிகிச்சை பெறும் வாய்ப்பை அதிகரிப்பதுடன், விரைவான சிகிச்சைக்கு வழிவகுத்து இறப்பு விகிதங்களைக் குறைக்கிறது.

மிகவும் சிக்கலான, தீவிர சிகிச்சை தேவைப்படும் சிகிச்சைகளில் நிபுணத்துவம் பெற்ற, டான் டோக் செங் மருத்துவமனையின் அதிர்ச்சி சிகிச்சை மையம் சக்கரத்தின் மையமாகச் செயல்படும்.

மத்திய சிங்கப்பூரில் உள்ள மற்ற மருத்துவமனைகள், சக்கரத்தை இணைக்கும் கம்பிகள் போலச் செயல்பட்டு, மிதமானது முதல் தீவிரம் குறைந்த நோயாளிகளைக் கவனிக்கும்.

இந்தச் சிகிச்சை சக்கரத்தில், வெவ்வேறு சுகாதாரப் பராமரிப்புக் குழுமங்களைச் சேர்ந்த கூடெக் புவாட் மருத்துவமனை, உட்லண்ட்ஸ் சுகாதாரக் குழுமம், செங்காங் பொது மருத்துவமனை, ரா◌ஃபிள்ஸ் மருத்துவமனை, கேகே மகளிர், குழந்தைகள் மருத்துவமனை ஆகியவை அடங்கும்.

“வளங்களை அதிகபட்சம் பயன்படுத்த இந்த ஏற்பாடு உதவுகிறது. சிங்கப்பூரில் உள்ள எட்டு சிறப்பு அவசர அறுவை சிகிச்சை நிபுணர்களில் நால்வர் டான் டோக் செங்கில் உள்ளனர்,” என்று டான் டோக் செங் அதிர்ச்சி சிகிச்சை மையத்தின் இயக்குநர் டாக்டர் டியோ லி செர்ங் புதன்கிழமை (ஜூலை 16) செய்தியாளர்களிடம் கூறினார்.

இதர சிறப்பு அவசர அறுவை சிகிச்சை நிபுணர்கள் மற்ற மூன்று மருத்துவமனைகளைச் சேர்ந்தவர்கள்.



கடுமையாகக் காயமடைந்தவர்களுக்கான அவசர சிகிச்சையின்போது எடுக்கும் முடிவுகள் மிக முக்கியமானவை. அத்தகைய சிகிச்சையின்போது பெரும்பாலும் நிலைமை மோசமாகும். உயிரைக் காப்பாற்றுவதற்கான நேரம் குறைந்துகொண்டே இருக்கும். **படம்: டான் டோக் செங் மருத்துவமனை**

சாலை விபத்துகள், மோசமாக விழுதல் அல்லது தாக்கப்படுவதால் பல கடுமையான காயங்கள் அல்லது பல உறுப்புகளின் பாதிப்புக்கு ஆளானவர்களுக்கான இந்த சிகிச்சை ஏற்பாட்டு முறை, ஜூலை 17 முதல் 18 வரை சன்டெக் சிங்கப்பூர் மாநாடு, கண்காட்சி மையத்தில் நடைபெற்ற சிங்கப்பூர் அவசர, தீவிர சுகாதாரக் கவனிப்பு மாநாடு 2025ல் பகிரப்பட்டது.

சிங்கப்பூரில் மரணத்திற்கான முதல் 10 காரணங்களில் ஒன்றாக அதிர்ச்சிக் காயங்கள் உள்ளன. இதுகுறித்த தேசிய பதிவின்படி 2021க்கும் 2023க்கும் இடைப்பட்ட காலத்தில் 100,000 பேரில் 8 பேர் கடுமையான காயத்துக்குச் சிகிச்சை பெற்றனர். இவர்களில் 10ல் ஏழு பேர் 65 வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் உடையவர்கள். ஐவரில் ஒருவர் உயிர் பிழைக்கவில்லை, 50 பேரில் ஒருவர் மிதமான காயங்களால் இறந்துள்ளார்.

காயமடையும் அனைவரையும் டான் டோக் செங் அவசர சிகிச்சை மையத்துக்குக் கொண்டு செல்லாமல், கடும் காயமடைந்தவருக்கு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சையளித்து, அவரது நிலைமை சற்று மேம்பட்டதும் சிக்கலான, உயிருக்கு ஆபத்துள்ள சிகிச்சைக்கு டான் டோக் செங்குக்குக் கொண்டு செல்லப்படுவார். சிகிச்சை முடிந்த பின்னர் அவர் மற்ற மருத்துவமனைக்கு மாற்றப்படலாம்.

நோயாளியின் நிலைமை மிக மோசமாக இருந்தால் டான் டோக் செங் சிகிச்சை மையத்தின் நிபுணர்கள் அவர் இருக்கும் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை அளிப்பர் என்று டாக்டர் டியோ விளக்கினார்.

டான் டோக் செங் அதிர்ச்சி சிகிச்சை மையம் செங்காங் மருத்துவமனையுடன் இணைந்து 2016ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

“இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் இதை (மாதிரியை) முழுமையாகச் செயல்படுத்த முயற்சி செய்கிறோம். ஏனைய சுகாதாரப் பராமரிப்புக் குழுமங்களுக்கும் இது முன்மாதிரியாக இருக்கும்,” என்று டாக்டர் டியோ விவரித்தார்.

## மியன்மார் பணிப்பெண் மரணம்: முன்னாள் போக்குவரத்துக் காவல் அதிகாரிக்குச் சிறை



கெவின் செல்வம் (இடம்), திருவாட்டி பியாங் நியே டான்.
**கோப்புப் படங்கள்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், ஹெல்பிங் ஹேண்ட்ஸ் ◌ஃபார் மைக்ரண்ட் ஒர்க்கர்ஸ்**

சிங்கப்பூரில் ஆக மோசமான பணிப்பெண் வதைச் சம்பவங்களின் தொடர்பில் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் காவல்துறை அதிகாரி கெவின் செல்வத்திற்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

46 வயதாகும் செல்வத்தைக் குற்றவாளி என மாவட்ட நீதிபதி டியோ அய் லின், ஏப்ரல் மாதம் தீர்ப்பளித்தார்.

மியன்மாரைச் சேர்ந்த பணிப்பெண் திருவாட்டி பியாங் நியே டானைப் பட்டினி போட்டுக் கொடுமைப்படுத்திய அவரது அப்போதைய மனைவி காயத்திரி முருகையனுக்கு உடந்தையாக இருந்த ஒரு குற்றச்சாட்டு, கெவின் மீது சுமத்தப்பட்டது.

அத்துடன், அந்த 24 வயதுப் பெண்ணின் தலைமுடியைப் பிடித்துத் தரையிலிருந்து தூக்கியது தொடர்பில் செல்வம் மீது சுமத்தப்பட்ட மற்றொரு குற்றச்சாட்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

காவல்துறை அதிகாரிக்குப் பொய்யான தகவல் அளித்த குற்றத்தையும் பீஷானிலுள்ள தன் வீட்டில் கண்காணிப்புக் கேமராவை அகற்றி, ஆதாரத்தை அவர் மறைத்த குற்றத்தையும் நீதிமன்றம் உறுதி செய்தது.

இவ்வழக்கில், பணிப்பெண்ணைச் சித்திரவதை செய்தோரின் குற்றம் உறுதிசெய்யப்பட்ட கடைசி நபர் செல்வம்.

2016ல் அந்தப் பணிப்பெண் இறந்தபோது அவரது எடை 24 கிலோவாக இருந்தது. 2015ஆம் ஆண்டு மே 28ல் செல்வத்தின் குடும்பத்திற்கு வேலை செய்யத் தொடங்கியபோது அவரது எடை 39 கிலோகிராம்.

ஆகஸ்ட் 2016ல் செல்வம், சிங்கப்பூர்க் காவல்துறையிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டார். 2020ல் செல்வமும் காயத்திரியும் மணவிலக்கு பெற்றனர்.

2021ல் 41 வயதாக இருந்த காயத்திரிக்கு 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஈராண்டுகள் கழித்து காயத்திரியின் தாயார் பிரேமா எஸ். நாராயணசாமிக்கு 17 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது அவருக்கு 64 வயது.

திருவாட்டி பியாங், 14 மாதங்களில் பலமுறை துன்புறுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

## ஈராக் பேரங்காடியில் மூண்ட தீயில் 69 பேர் உயிரிழப்பு



அல் குத் நகரில் தீக்கிரையான பேரங்காடி. **படம்: ராய்ட்டர்ஸ்**

ஈராக்கின் கிழக்குப் பகுதியிலுள்ள அல் குத் நகரப் பேரங்காடி ஒன்றில் புதன்கிழமை (ஜூலை 16) இரவு நேர்ந்த தீ விபத்தில் குறைந்தது 69 பேர் மாண்டுவிட்டனர்; மேலும் 11 பேரைக் காணவில்லை.

ஐந்து நாள்களுக்கு முன்னர் தான் அந்தப் பேரங்காடி திறக்கப்பட்டதாக பிபிசி செய்தி தெரிவித்தது.

அந்த ஐந்து மாடிக் கட்டடம் தீப்பற்றி எரிவதையும் தீயை அணைக்க தீயணைப்பாளர்கள் போராடியதையும் சமூக ஊடகக் காணொளிகள் காட்டின.

மாண்டோரில் 59 பேரின் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் பத்து பேரின் உடல்கள் மோசமாக எரிந்துவிட்டதால் அவர்களை அடையாளம் காண்பதில் சிரமம் நிலவுவதாகக் கூறப்பட்டது. தீ விபத்துக்கான காரணம் இன்னும் தெரியவில்லை.

8 887181 530005 >

60 காசு

தமிழ் முரசு சந்தாவுக்கு அழைக்கவும்: 6388-3838

# ஐந்து உயர்கல்வி நிலையங்களுக்கு அருகே மின்சிகரெட் முறியடிப்பு நடவடிக்கை

சிங்கப்பூரில் ஐந்து உயர்கல்வி நிலையங்களுக்கு அருகே அதிகாரிகள் மினசிகரெட் முறியடிப்பு நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை (ஜூலை 14) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 27 பேர் பிடிபட்டனர், மின்சிகரெட் புகைத்ததற்காக அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது என்று சுகாதார அறிவியல் ஆணையம் ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்சிடம் தெரிவித்துள்ளது.

சமூகத்தினர் ஒன்றுகூடும் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட முறியடிப்பு நடவடிக்கைகள் மூலம் அவர்கள் பிடிபட்டனர். சட்டபூர்வ வயதை அடைவதற்கு முன்பு புகைபிடித்த குற்றத்துக்காக மேலும் எட்டுப் பேர் பிடிபட்டனர்.

பிடிபட்டவர்கள் 17 முதல் 66 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று சுகாதார அறிவியல் ஆணையம் குறிப்பிட்டது. ஐந்து மணிநேரம் நீடித்த முறியடிப்பு நடவடிக்கையில் 31 மின்சிகரெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் ஆணையம் மேலும் தெரிவித்தது.

சிங்கப்பூரின் கிழக்குப் பகுதியில் திங்கட்கிழமை காலை 11 மணியளவில் முறியடிப்பு நடவடிக்கை தொடங்கியது. அதிகாரிகள் பல்வேறு இடங்களில் தங்களைப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டனர்.

பின்னர் பிற்பகல் நான்கு மணியளவில் சிங்கப்பூரின் வடக்குப் பகுதிக்குச் சென்ற சுகாதார அறிவியல் ஆணைய அதிகாரிகளுடன் ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்சும் சென்றது.

பல்வேறு உயர்கல்வி நிலையங்களுக்கு அருகே அதிகாரிகள் முறியடிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சுயமாக இயங்கும் பல்கலைக்கழகங்கள், கலைக் கல்விக் கழகங்கள், பலதுறைத் தொழிற்கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்விக் கழகங்கள் ஆகியவை உயர்கல்வி நிலையங்களில் அடங்கும்.

சென்ற ஆண்டு ஜனவரியிலிருந்து இவ்வாண்டு மார்ச் மாதத்துக்கு இடைப்பட்ட காலத்தில் மின்சிகரெட் புகைத்த காரணத்திற்காக சுமார் 2,600 மாணவர்களைப் பற்றி பள்ளிகளும் கல்வி நிலையங்களும் சுகாதார அறிவியல் ஆணையத்திடம் தெரியப்படுத்தியதாக கடந்த மே மாதம் 16ஆம் தேதி சுகாதார அமைச்சும் சுகாதார அறிவியல் ஆணையமும் கூட்டறிக்கையில் தெரிவித்தன. அந்த எண்ணிக்கை 2022ல் கிட்டத்தட்ட 800ஆகவும் 2023ல் 900ஆகவும் சென்ற ஆண்டு 2,000ஆகவும் இருந்தது.

கடந்த 2018ஆம் ஆண்டிலிருந்து சிங்கப்பூரில் தடை செய்யப்பட்டுள்ள மின்சிகரெட் புகைக்கும் பழக்கம், பள்ளிகளில் பிரச்சினையாக இருந்துவருவதாக ஆசிரியர்கள் சிலர் ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்சிடம் தெரிவித்தனர். தகவல் தெரிவித்த ஆசிரியர்கள் தங்கள் அடையாளத்தை வெளிப்படுத்த விரும்பவில்லை.